நாள்.25.03.2024

**அசல் வழக்கு எண். 109/2018**

**வா.சா.1- 1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

60 குழிக்கு சேர்ந்தாற்போல் தென்புறம் 1-1/2 செண்ட் கிழமேலாக நத்தம் புறம்போக்கு உள்ளது என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் மேற்படி 1-1/2 செண்ட் நத்தம் புறம்போக்கு என்று சொல்லியுள்ளது தெரியுமா என்றால் தெரியாது. வழக்கு புல எண்ணில் உள்ள மொத்த விஸ்திரணம் 60 குழியை நான் அளந்துப்பார்க்கவில்லை. மேற்படி 60 குழி நிலமுமம், ராமசாமி தேவர், மாணிக்க தேவர் , நாராயணசாமி தேவர் மற்றும் அவரது வாரிசுகள் ஆகியோர்கள் சமமாக பாகம் பிரித்துக்கொண்டார்கள் என்றால் எனக்கு தெரிந்தவரை இல்லை. எவ்வாறு பாகம் பிரித்துக்கொண்டார்கள் என்றால் பாகமே பிரிக்கப்படவில்லை. மேற்படி தாவா புல எண்ணில் கண்ட 20 செண்டை மேற்படி 3 நபர்களின் வாரிசுதாரர்கள் தலா 6-1/2 செண்ட் பாகம் பிரித்துக்கொண்டு தனிதனியாக அனுபவம் செய்துவருகிறார்கள் என்றால் பாகமே பிரிக்கப்படவில்லை. ராமசாமி தேவர், மாணிக்க தேவர் , நாராயணசாமி தேவர் ஆகியோர்களுக்கு தாவா சொத்தில் சம பங்கு உள்ளது என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. அம்மாகண்ணு என்பவர் யார் என்றால் எனது தாயார். எனது தாயார் அம்மாகண்ணு மாணிக்கதேவருக்கு என்ன உறவு முறை என்றால் மகள் ஆவார். கோவிந்தராஜ் என்பவர் நாராயணசாமி தேவரின் மகன் என்றால் சரிதான். எனது தாயார் அம்மாகண்ணு தாக்கல் செய்த வழக்குரையில் கண்ட முழு விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். எனது தாயார் அம்மாகண்ணு 17.01.1986ம் தேதியில் நாராயணசாமி தேவர் மகன் கோவிந்தராஜ் என்பவரிடமிருந்து வழக்கு புல எண்ணில் 10 செண்ட் கிரையம் வாங்கியிருப்பதாக கூறப்பட்டுள்ளது என்றால் கூறப்பட்டுள்ளது. வழக்கு புல எண்ணில் எனது தாயார் அம்மாகண்ணுவின் தந்தை மாணிக்கதேவருக்கு எவ்வளவு பாகம் என்றால் தெரியாது. தாவா புல எண்ணில் ராமசாமி தேவர், நாராயணசாமி தேவர் ஆகியோர்களுக்கு எவ்வளவு பாகம் என்றால் தெரியாது. எனது தாயார் அம்மாகண்ணுவிற்கு மேற்படி புல எண்ணில் யார் யாருக்கு எவ்வளவு பாகம் என்று தெரியுமா என்றால் தெரியாது. எனது தாயார் அம்மாகண்ணுவிற்கு தற்போது என்ன வயது ஆகிறது என்றால் 80 வயது இருக்கும். எனது தாயார் அம்மாகண்ணுவிற்கு வழக்கு புல எண்ணை பற்றி ஏதும் தெரியாது என்றால் சரிதான். எனது தாயார் அம்மாகண்ணு பெயரில் 17.01.1986ம் தேதியில் ஏற்பட்ட கிரைய பத்திரம் மோசடியாக கோவிந்தராஜ் என்பவருக்கு பாகம் இல்லாத சொத்தையும் சேர்த்து கிரையம் பெற்றுள்ளது சட்டப்படி செல்லதக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. மேற்படி ஆவணம் ஒரு மோசடியாக ஏற்பட்ட ஆவணம் என்று சொன்னால் சரியல்ல. வழக்கு புல எண்ணில் நாராயணசாமி தேவரின் வாரிசுகளுக்கு 6-1/2 செண்டுதான் பாத்தியம் என்றும் 10 செண்ட் கிரையம் கொடுத்துள்ளது சட்டப்படி செல்லதக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. நான் அசல் வழக்கை பாதை பாத்தியம் கேட்டுதான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். தாவா புல எண்ணில் கண்ட மொத்தம் 20 செண்டில் மேற்கண்ட 3 நபர்களுக்கும்

சமமான பங்கு என்றால் சரிதான். தாவா புல எண்ணில் கண்ட பாதை 3 நபர்களுக்கும் தேவை.

சொத்தை பிரிக்கம்போது பாதையை ஒதுக்கிதான் மீதியை பாகம் பிரித்துக்கொள்வார்கள் என்றால் சரிதான். எனது தாயார் தாக்கல் செய்துள்ள வழக்குரையில் தாவா புல எண்ணில் மொத்த விஸ்திரணத்தில் யார் யாருக்கு எவ்வளவு விஸ்திரணம் என்றும் எவ்வளவு பாதைக்காக ஒதுக்கப்பட்டது என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். பக்கிரிசாமி தேவர் யார் என்றால் ராமசாமி தேவர் என்பவரின் மகன் ஆவார். ராமசாமி தேவரின் வாரிசுகள் அனைவரையும் அசல் வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சேர்க்கவில்லை. நாராயணசாமி தேவர் மகன் கோவிந்தராஜ் என்பவரையும் அசல் வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சேர்க்கவில்லை. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 நான்கெல்லையில் பாதை பற்றி ஏதும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். வழக்கு சொத்திற்குண்டான புல எண்ணிற்கு வரைபடம் ஏதும் தாக்கல் செய்யப்படவில்லை. தாவா புல எண்ணில் பாதை உள்ளது என்பதை ஊர்ஜிதம் செய்வதற்கு வருவாய் துறை ஆவணங்கள் ஏதும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது தாயார் பெயரில் கிரையம் வாங்கியபிறகுதான் உட்பிரிவு செய்யப்பட்டது. உட்பிரிவு செய்யும்போது ராமசாமி தேவரின் வாரிசுகளுக்கு தகவல் தெரிவிக்கப்படவில்லை என்றால் சரிதான். நானும், எனது தாயாரும் சேர்ந்து அனுபவத்திற்கு விரோதமாக உட்பிரிவு செய்துள்ளோம் என்றால் சரியல்ல. நான் செய்துள்ள உட்பிரிவானது சட்டத்திற்கு விரோதமான என்றும், அது எங்களை கட்டுப்படுத்தாது என்று சொன்னால் சரியல்ல. உட்பிரிவின் அடிப்படையில் வரைபடம் வாங்கி தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நீதிமன்றத்திலிருந்து ஆணையர் வந்து தாவா சொத்தை பார்த்தபோது நான் இருந்தேனா என்றால் இல்லை. நான் பாதை கேட்கும் பகுதியானது . ராமசாமி தேவர், மாணிக்க தேவர் , நாராயணசாமி தேவர் ஆகியோர்களின் வீடுகளானது தென்புறம் நோக்கி உள்ளது என்றும், அந்த தென்புறத்தில் கிழமேலாக செல்லும் வீட்டின் முன்பதியான வாசல் பகுதியைதான் பாதையாக கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். நான் பாதையாக கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ள இடத்திற்கும் தென்புறத்தில் இடம் உள்ளதா என்றால் இல்லை. நாங்கள் பாதையாக உரிமை கோரும் வழக்கு புல எண்ணில் பாதைக்கு தென்புறம் இடம் உள்ளதா என்றால் இல்லை. வழக்கு சொத்தின் பாதைக்கு அடுத்த தென்புறத்தில் இடம் உள்ளது என்றும் நான் இந்த வழக்கிற்காக பொய்யாக இடம் இல்லை என்று சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. வேறு ஒரு ஆணையரை நியமணம் செய்து வழக்கு சொத்தை பார்க்க எனக்கு ஆட்சேபணை உண்டா என்றால் இல்லை. எனது தாயார் தாக்கல் செய்துள்ள வழக்குரையில் கண்ட சொத்து விபரம் தெரியுமா என்றால் தெரியும். அந்த சொத்து விபரம் தவறு என்றால் சரியல்ல. தாவா ஏ பட்டி சொத்து பற்றி விபரம் தெரியுமா என்றால் தெரியாது. பி பட்டி சொத்து பற்றி விபரம் தெரியுமா என்றால் தெரியாது. வழக்கு ஏ,பி பட்டியில் கண்ட எந்த சொத்தில் பாதை பாத்தியம் கேட்டு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் தெரியாது. வழக்கு புல எண்ணில் உள்ள 60 குழி நிலத்தில் தென்புறம் ஓரமாக கிழமேலாக பாதை செல்வதில் எனக்கு ஆட்சேபணை ஏதும் இல்லை. நான் இல்லாத பாதைக்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்தில் அதிக

விஸ்திரணம் அடையவேண்டும் என்ற என்னத்தில் மோசடியாக ஒரு கிரைய ஆவணத்தை ஏற்படுத்தி அதன் அடிப்படையில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. அசல் வழக்கில் எனக்கு எவ்வித பரிகாரம் சட்டப்படி கிடைக்கதக்கல்ல என்றும், உண்மையை மறைத்து தவறான தகவலின் அடிப்படையில் அசல் வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றும், எனது தாயார் அம்மாகண்ணு நல்ல நிலையில்தான் உள்ளார் என்றும், அவர் நீதிமன்றத்தில் வந்தால் உண்மை தெரிந்துவிடும் என்பவதால் நான் பவர் பத்திரம் மூலம் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் பொய் கட்சி செய்தும், சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை இல்லை.</u>**

*Taken down by the typist to my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him/her to be Correct.*

Sd/- M. Ravichandran,B.A.,B.L.,

District Munsif, Pattukkottai.